6. அறிவிப்புகள்— தொடர்ச்சி.

(இ) நிதி ஒதுக்க (எண் 3) சட்டமுன்வடிவு, 1992.(ஆ.செ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1992-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (எண் 3) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

5. சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்) — தொடர்ச்சி.

(அஅ) நிதி ஒதுக்க (எண் 3) சட்டமுன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; 1992-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (எண் 3) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதியமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

"1992-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிஒதுக்க (எண் 3) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்."

எனக்கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு நிதியமைச்சரவர்களின் தீர்மானம் பேரவையில் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதியமைச்சர்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.